**ஆகஸ்ட் – 12**

# TNPSC துளிகள்

- ஆசியான் நாடுகளுக்கும் வடகிழக்கு மாநிலங்களுக்கும் இடையே உள்ள உறவை பலப்படுத்த 'Act East Business Show' என்ற நிகழ்ச்சியை மேகாலயா நடத்தியது. இந்த நிகழ்ச்சி வடகிழக்குப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சகத்துடன் இணைந்து இந்திய வர்த்தக சங்கத்தால் நடத்தப் பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## நீதிபதி R.ரகுபதி ஆணையம்

- தமிழ்நாடு உயர்நீதிமன்றம், நீதிபதி R. ரகுபதி ஆணையத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.
- இந்த ஆணையம் 2011ல் அதிமுக அரசால் 2006-2011 ஆண்டுகளுக்கிடையே சட்ட சபை மற்றும் தலைமைச் செயலக வளாக கட்டுமானப் பணிகளில் நடைபெற்ற முறை கேடுகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## ICRISAT உடனான தெலுங்கானாவின் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- தெலுங்கானா மாநிலம் மித வெப்ப மண்டல பகுதிகளுக்கான சர்வதேச ஆராய்ச்சி பயிர்கள் நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (International Crops Research Institute for the Semi-Arid Tropics - ICRISAT) கையெழுத்திட்டுள்ளது.
- காக்கத்தியா என்ற திட்டத்தின் தாக்கம் குறித்து ஆராய்வதே இதன் நோக்கமாகும்.
- காக்கத்தியா திட்டம் என்பது தெலுங்கானாவில் உள்ள அனைத்து சிறு பாசன தொட்டிகள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை மறுசீரமைப்பு செய்யும் திட்டமாகும்.

## மக்கள் பிரநிதித்துவ (திருத்த) மசோதா

- மக்களவை, அரசு ஊழியர்கள் வாக்காளர்களின் வரிசையில் பதிலளிப்பு வாக்குமுறையை வெளிநாட்டு இந்தியர்களுக்கும் விரிவுபடுத்துவதற்கான வசதியை மக்கள் பிரதிநிதித்துவ (திருத்த) மசோதா -2017 என்ற மசோதாவின் மூலம் குரல் வாக்கெடுப்பின் வழியாக நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதா மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் (RPA) 1950 மற்றும் மக்கள் பிரநிதித்துவ சட்டம் (RPA) 1951 ஆகியவற்றை திருத்தி பதிலளிப்பு வாக்கு முறையை அனுமதிக்கவும், மேற்கண்ட சட்டங்களில் உள்ள சில விதிகளை பாலின நடுநிலை கொண்டதாகவும் செய்ய முயல்கிறது.
- இந்த மசோதா இரண்டு சட்டங்களிலும் 'மனைவி' என்ற வார்த்தையை "துணை" என்று மாற்றியுள்ளது.

- தற்போது அரசு ஊழியர்கள் மட்டுமே பதிலளிப்பு வாக்கு முறையில் வாக்களிக்க இயலும்.

### 4 கூடுதல் NDRF படைப்பிரிவு

- மத்திய மந்திரி சபை, இந்தியாவின் பேரிடர் எதிர்ப்பு அமைப்பை வலுப்படுத்துவதற்காக தேசிய பேரிடர் எதிர்ப்பு படையில் (National Disaster Response Force - NDRF) கூடுதலாக நான்கு படைப்பிரிவுகளை திரட்ட ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நான்கு படைப்பிரிவுகள் முதலில் கீழ்க்கண்டவாறு திரட்டப்படும்
    - இந்திய திபெத்திய எல்லைக் காவல் படையில் 2 படைப்பிரிவு, அஸ்ஸாம் ரைஃபிள் (ARs) மற்றும் எல்லை பாதுகாப்புப் படை (BFS) ஆகியவற்றில் தலா ஒரு படைப்பிரிவு.
- பின்னர் இந்த நான்கு படைப்பிரிவுகளும் NDRF படைப்பிரிவாக மாற்றப்படும்.
- இந்த படைப்பிரிவுகள் ஜம்மு மற்றும் காஷ்மீர், இமாச்சல் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் டெல்லி தேசிய தலைநகர் பிராந்தியம் ஆகிய பகுதிகளில் பேரிடர் பாதிப்பு விவரங்களின் அடிப்படையில் அமர்த்தப்படும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

### மத்தியப் பிரதேச ஊழியர்களுக்கு GPS பொருத்தப்பட்ட கைக்கடிகாரம்

- மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் நகராட்சி நிறுவனம் தனது 10,000 ஒற்றை பணியாளர்களை கண்காணிப்பதற்காக புவியிடங்காட்டி (GPS) பொருத்தப்பட்ட கைக்கடிகாரங்களை வழங்கியுள்ளது.
- நாட்டில் இம்மாதிரியான முயற்சி எடுக்கப்படுவது இதுவே முதன் முறையாகும்.

## மாநிலச் செய்திகள்

### முக்கிய மந்திரி கன்யா உத்தன் யோஜனா

- பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் பெண் குழந்தைகளுக்கான "முக்கிய மந்திரி கன்யா உத்தன் யோஜனா" திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- இத்திட்டமானது பெண் குழந்தைகளுக்கு பிறப்பு முதல் பட்டதாரி ஆகும் வரை ரூ.54,100 வழங்குகிறது.
- இது பெண்களுக்கு அதிகாரமளிக்கும் மாநில அரசின் தீர்மானத்தின் வெளிப்பாடாகும்.
- இத்திட்டம் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலத்துறை ஆகிய மூன்று துறைகளால் இயக்கப்படும்.
- மேலும் முதலமைச்சர் இதர பல திட்டங்களையும் அறிவித்துள்ளார்.
    - "மிதிவண்டி திட்டம்" என்பதற்கான தொகை ரூ.2,500/- லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்துதல்.

- கிஷோரி ஸ்வஸ்த்யா யோஜனா திட்டத்தின் கீழ் துப்புரவு துணி (Sanitary Napkin) வாங்குவதற்கான தொகை ரூ.150/- லிருந்து இருமடங்காக ரூ. 300க்கு உயர்த்தப்படுதல்.

## ஸ்வச்ச மேவ ஜயதே

- ❖ கர்நாடக அரசு ஒவ்வொரு கிராமப்புற குடிமகன்களையும் தூய்மைக்கான உறுதிமொழியை எடுப்பதற்காக "ஸ்வச்மேவ ஜயதே" என்ற கிராமப்புற தூய்மை மற்றும் துப்புரவு பிரச்சாரத்தை துவக்கியுள்ளது.
- ❖ பள்ளிக் குழந்தைகளின் உதவியோடு ஸ்வச் சர்வேக்சன் கிராமின் 2018 (SSG 2018) கணக்கெடுப்பை அனைத்து மாவட்டங்களிலும் அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## ஐரோப்பிய சுற்றுப் பயணக் கோப்பை

- ❖ பிஜி சர்வதேசப் போட்டியில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அந்தோனி குவாயலை தோற்கடித்து இந்திய குழிப்பந்தாட்டக்காரர் ககன்ஜீத் புல்லர் முதல் ஐரோப்பிய சுற்றுலா கோப்பை வென்றுள்ளார்.



- ❖ இவ்வெற்றி புல்லரின் முதல் ஐரோப்பிய சுற்றுப் பயணக் கோப்பை வெற்றி மற்றும் 9-வது ஆசிய சுற்றுப் பயணக் கோப்பை வெற்றியாகும். இத்துடன் மொத்தமாக இது 10-வது வெற்றியாகும்.
- ❖ இதனால் ஆசிய சுற்றுப் பயணக் கோப்பைப் போட்டியில் வென்ற பெரிய சாதனை படைத்த இந்திய ஆட்டக்காரரும், ஆஸ்திரேலிய சுற்றுப் பயணக் கோப்பையை வென்ற முதல் இந்தியரும் இவர் ஆவார்.

## பெண்களுக்கான ஹாக்கிப் போட்டி

- ❖ பெண்களுக்கான ஹாக்கி உலகக் கோப்பையை 2018-ல் 8-வது முறையாக வென்று

நெதர்லாந்து உலக சாதனை படைத்துள்ளது.

- இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அயர்லாந்தினை 6-0 என்ற கணக்கில் வீழ்த்தி நெதர்லாந்து அணி வென்றுள்ளது.



- பெண்களுக்கான ஹாக்கிப் போட்டியில் கிட்டி வான்மாலே அதிக கோல்களை அடித்துள்ளார்.
- ஸ்பெயின், ஆஸ்திரேலியாவினை 3-1 என்ற கணக்கில் வீழ்த்தி மூன்றாவது இடத்தினை வென்று அதன் முதல் உலகக் கோப்பை பதக்கத்தினை வென்றுள்ளது.
- இந்தியா 8-வது இடத்தில் இப்போட்டியை நிறைவு செய்துள்ளது.

### நேபாளம் - நெதர்லாந்து சர்வதேச ஒருநாள் போட்டி


- நெதர்லாந்தினை வீழ்த்தி நேபாளம் தனது முதல் சர்வதேச ஒருநாள் போட்டியினை வென்று சாதனை படைத்துள்ளது.
- 15 வருடங்கள் மற்றும் 335 நாட்கள் என்ற வயதில், ரோகிஸ் குமார் பவ்டல் (நேபாளம்) சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடும் 4-வது இளம் கிரிக்கெட் வீரராக ஆகி சாதனை படைத்துள்ளார்.
- பாகிஸ்தானைச் சேர்ந்த ஹசன் ரசா சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடிய முதல் இளம் கிரிக்கெட் வீரராக உள்ளார். இவர் தனது அறிமுக ஆட்டத்தினை 1996-ல் ஜிம்பாப்வேக்கு எதிரான போட்டியில், தனது 14 வருடங்கள் மற்றும் 233 நாட்கள் என்ற வயதில் விளையாடினார்.

## முக்கிய தினங்கள்

### ஹிரோசிமா தினம் – ஆகஸ்ட் 6

- ஜப்பானிய நகரம் ஹிரோசிமா மீது அணுகுண்டு வீசப்பட்ட தினமான ஆகஸ்ட் 6, 1945 ஹிரோசிமா தினமாக ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூறப்படுகிறது.
- இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டு போடப்பட்ட 73-வது ஆண்டு நிறைவினை

இத்தினம் குறிக்கிறது.



- ஆகஸ்ட் 6, 1945-ல் அமெரிக்க வெடிகுண்டு விமானம் எனோலா கே இராணுவப் போரில் இதுவரை பயன்படுத்தாத ‘Little Boy’ என்று பெயரிடப்பட்ட முதல் அணுகுண்டினை ஹிரோசிமா மீது வீசியது.

- - - - - - - - - - - - - - -